1971 டிசம்பர் 13]

திரு. என். இராஜாங்கம் : தலைவரவர்களே, கடலூரில் பெக்கர் ஹோம் ஒன்று நடந்து வந்தது. இப்போது அது அநாதை மாணவர் இல்லமாக மாறி இருக்கிறது. அந்தப் பிச்சைக்காரர்கள் விடுதிக்கு அரசாங்கம் கொடுத்து வந்த உதவித் தொகை நிறுத்தப்பட்டு இருக்கிறதா, அல்லது அது மாணவர் இல்லத்திற்கு மாற்றப்பட்டு இருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதைப் பற்றிய தகவல் எதுவும் இல்லை.

திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, மதுரையில் அறிந்த் குஷ்ட நிவாரண சங்கம் என்று சில ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டு, பல குஷ்ட ரோகிகளுக்கு நிவாரணம் அளித்து வருகிறார்கள். அந்தச் சங்கத்தில் தொழு நோய்க்காரர்களை சேர்ப்பது இல்லை. அந்தச் சங்கத்தில் தொழு நோய்க்காரர்களையும் சேர்த்துக் கொண்டு, அவர்களுக்கும் மறு வாழ்வு அளிக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவர்களையும் சேர்த்துக்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, கடந்த காலத்தில் பிரவென்ஷன் ஆப் பெக்கிங் ஆக்ட் என்ற சட்டம் நடைமுறையில் இருந்தாலும், அது அமல் படுத்தப்படாமல் இருந்தது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்காக ரூ. 1 கோடி திரட்டி, அதை இன்று மும்முரமாக அமல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எல்லா மாவட்டங்களிலும் இந்த இல்லங்கள் திறக்கப்பட்டு, எவ்வளவு விரைவாக எல்லாப் பகுதிகளிலும் இருக்கிற பிச்சைக் காரர்களையும் இந்த இல்லங்களுக்கு அழைத்து வந்து மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்று ஒரு காலவரையறையை அரசு நிர்ணயித்து செயல்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது முதலில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்குத்தான் மறுவாழ்வு அளிப்பதற்காக வேண்டி அரசு அக்கறை காட்டி, அந்தத் திட்டத்தை நடத்திக்கொண்டு வருகிறது. அதற்குப் பிறகு மற்ற பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு பற்றி அரசு சிந்தித்து, திட்டங்களைத் தீட்டி அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க முயற்சிகளை மேற் கொள்ளும்.

* 314 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு உள்ள அட்டைகள் விற்பனை மூலம் அண்மையில் கிடைத்த பணம் எவ்வளவு ?

(இ) அந்தப் பணத்தை அந்த மாவட்டத்திற்கு மட்டும் செலவு செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ரூ. 1,10,000.

(இ) இல்லை.

மனுநீதி நாள்

*** 315 வினா—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "மனுநீதி நாள்" திட்டத்தின் அடிப்படையில் நெல்லை மாவட்டத்தில் எத்தனை கிராமங்களில் 1—1—1970 முதல் 1—6—1971 வரை மனுநீதி விசாரணை நடத்தப்பட்டுள்ளது?

(இ) மனுநீதி விசாரணைக்கு வந்த மகஜர்கள் எத்தனை?

(உ) மனுநீதி நாள் திட்டத்தின் மூலம் பயனடைந்தவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மனுநீதி திட்ட அடிப்படையில் 1—1—1970 முதல் 1—6—1971 வரை நெல்லை மாவட்டத்தில் 1,273 கிராமங்களில் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

(இ) 23,844 மனுக்கள் மனுநீதி விசாரணைக்கு வந்தன.

(உ) இத்திட்டத்தின் மூலம் 7,340 பேர் பயனடைந்தனர்.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இந்த மனுநீதி திட்டத்தின் காரணமாக அநேகமாக கிராம மக்கள் பயன் பெறுகிறார்கள். ஆகவே, இந்த மனுநீதித் திட்டத்தை தீவிரப் படுத்தி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தனி அதிகாரியை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மனுநீதித் திட்டம் நிரந்தரமாக வைப்பது என்பது இல்லை. ஆங்காங்கு அதிகாரிகள் சென்று மக்களுடைய குறைகளை விசாரித்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஒவ்வொரு கிராமம் கிராமமாகச் சென்று இப்படிச் செய்து வருகிறார்கள். எல்லா கிராமங்களிலும் இப்படி செய்து முடித்த பின்னர், மறுபடியும் எல்லாக் கிராமங்களுக்கும் ஒரு முறை வருவார்கள்.

Eviction of peasants in Saptur.

* 316. Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(*a*) whether representations have been received from **Saptur** in Tirumangalam taluk, Madurai district about illegal orders by Tahsildar in regard to the eviction of authorised peasants in support of **Zamindar;**